நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும். இந்த நோக்குடன் “தாய்வீடு” பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், ‘தாய்வீடு’ தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

### ஆழத்து முத்துக்கள் 12

# கலைப்பரிதி அரியாலை ச. உருத்திரேஸ்வரன்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

யாழ் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள அழகிய கிராமம் அரியாலை. அது சகல



கலைகளுக்கும் குறிப்பாக நாடகக் கலைக்குப் பெயர் போன ஊர். அரியாலையில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது நாடகத் துறையில் சம்பந்தப்பட்டிருப்பர் என்பது பொதுவான கூற்று. அந்த வகையில் அரியாலையைச் சேர்ந்த சதாசிவம் உருத்திரேஸ்வரன் அவர்கள் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பை இங்கு பதிவு செய்கிறேன்.

நாடகம் என்ற உறவு எனக்கும் இவருக்கும் இடையேயான பிணைப்பை இறுக்கமாக இணைத்திருந்தது. எனக்கு நாடகம் மீது ‘பனி’ என்றால் இவர் ‘பைத்தியமாக’ இருந்தார். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நானும் இவரும் சேர்ந்து, எமது பழம்பெரும் நாடகக் கலைஞர்களின் வீடுகளுக்குச் சென்று 1919ல் இருந்தான அரியாலையின் நாடக வரலாற்றுக் குறிப்புக்களைச் சேர்த்தது இன்றும் பசுமை-யான நினைவுகளாக உள்ளன.

உருத்தி என்று பலராலும் அழைக்கப்படும் இக்கலைஞனின் சிந்தையும், செயற்பாடும், தொடர்புகளும் நாடகம் சம்பந்தமாகவே இருந்தன. அவரது உருவம், நிமிர்ந்த நடை, சிகையலங்காரம் எல்லாம் ஒரு நடிகனை எப்போதும் நினைவுபடுத்தும். எமது ஊரில் ஒரே காலகட்டத்தில் பல முன்னணிக் கலைஞர்கள் இருந்ததால் பாத்திரத் தெரிவு என்பது பெரும் சிக்கலாகவே இருந்துவந்தது. ஆயினும், உருத்தி அண்ணன் தனக்குக் கொடுத்த பாத்திரத்தை மறுப்பின்றி ஏற்று, அதைத் திறம்படச் செய்வதில் வல்லவராக இருந்தார். ஒரு வசனத்தை மாற்றிச் சொல்வதற்குக் கூட நெறியாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பண்பாளராக இருந்தார். ஒரு பாத்திரத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால் நாடகம் முடியும் நாள்வரை அலங்காரம், ஒப்பனை, உடை என்று அது பற்றிய சிந்தையுடனேயே சைக்கிளில் சுழன்றுகொண்டு இருப்பார்.

தற்போது வாழ்ந்துவரும் எனது ஊர் நாடகக் கலைஞர்களில் குறிப்பாக மூவர் ஊர் எல்லை கடந்து வெளி இடங்களிலும் எமக்குப் பெருமை சேர்த்தனர். ஒருவர் நவீன நாடக உலகம் அறிந்த க.பாலேந்திரா அவர்கள். இன்னொருவர், நடிகமணி வைரமுத்து அவர்களுடன் இணைந்து மயான காண்டம், ஞானசௌந்தரி, நல்லதங்காள் போன்ற இசை நாடகங்களில் நடித்த செல்வம் அவர்கள். மற்றவர், யாழ். நாடக அரங்கக் கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டுவரும் எமது உருத்திரேஸ்வரன் அவர்கள்.

“இதுதான் கதை, இது சீன், நீ இப்படிச் சொல்லு” என்று திடீர் திடீரென நாடகம் போடுகிற ஒருவித அலை அடித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் நாடகம் என்பது ஒரு கலை, அதற்குப் பிரதி, பயிற்சி, காட்சி அமைப்பு என்பன அவசியம் என்பதை வலியுறுத்தி நின்றவர் உருத்தி அண்ணன். பின்னாட்களில் நாடக அரங்கக் கல்லூரியில் தன்னை இணைத்துக்கொண்டதும் இதன் ஒரு வெளிப்பாடே.

கமநலசேவைகள் திணைக்களத்தின் பெரும் பாக உத்தியோகத்தராகப் பணிபுரியும் இவர் தனது 15வது வயதில் எழுத்தாளர் டொமினிக் ஜீவாவின் ‘யார் கதாநாயகி’ என்ற பரிசு பெற்ற நாடகத்தில் மரிக்கொழுந்து என்ற தாய் பாத்திரத்தில் நடித்ததன் மூலம் நாடகத் துறையில் கால் பதித்தார். 1968ம் ஆண்டு குண்டகசாலை விவசாயக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ‘பேசாத தெய்வம்’ என்ற நாடகத்தின் மூலம் ஆண் பாத்திரங்கள் ஏற்று நடிக்கத் தொடங்கினார்.

உருத்திரேஸ்வரன் அவர்களது ஆரம்பகால நாடக வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமைந்தவை அரியாலையில் பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் சுதேசிய விழா நாடகங்களும், அரியாலை சனசமூக நிலைய நாடகங்களும் ஆகும். ஆயினும் பின் நாட்களில் யாழ் நாடக அரங்கக் கல்லூரியுடனான அவரது ஈடுபாடு பிற இடங்களுக்கும் அவரது புகழ் பரவக் காரணமாயிற்று.

அரியாலை சுதேசிய திருநாள் விழா நாடகங்களான
நாகவல்லி (வீரமாத்தாண்டன்), மருது பாண்டியர் (கேணல் வேல்ஸ்), ராணி சம்யுக்தா (ஜெயசந்திரன்), மாலிக்கபூர் (பாதுஷா), உயிரோவியம் (அலெக்சான்டர்), பாதுகை (தசரதன்), சகுந்தலை (துர்வாச முனிவர்), இராஜராஜசோழன் (இராஜராஜசோழன்), ஓதல்லோ (கேசியோன்) என்பன இவருக்குப் புகழ் சேர்த்த நாடகங்களாகும்.

அரியாலை சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாக்களில் மேடையேறிய ப.ஸ்ரீஸ்கந்தனின் ஆத்மாவின் ராகங்கள் (இன்ஸ்பெக்டர்) அபஸ்வர கீதங்கள் (புரட்சியாளன்) இவரது நடிப்புக்குச் சாட்சியங்களாக அமைந்தன.

1980இல் யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் ‘அவள் ஏன் கலங்குகின்றாள்’, மௌன குருவின் சங்காரம் - வடமோடி நாடகங்களில் நடித்ததன் மூலம் இவரது நாடகத்துறை சார்ந்த அனுபவங்கள் வேறு பரிமாணத்தைத் தொட்டன.

யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் மகாகவியின் புதியதொரு வீடு (மறைக்காடர்), நா. சுந்தரலிங்கத்தின் அபசுரம் (புரொபசர்), மௌனகுருவின் குருஷேத்திரோப தேசம் (கிருஷ்ணன்) பாஞ்சாலி சபதம் (துரியோதனன்), முருகையனின் வெறியாட்டு, ம.குழந்தை சண்முகலிங்கத்தின் தியாகத் திருமணம் போன்ற நாடகங்களிலும் நடித்திருந்தார்.

இவை தவிர, நாவலர் நூற்றாண்டை முன்னிட்டு மேடையேற்றப்பட்ட நல்லைநகர் நாவலர் (சேர் கேம்ஸ் போஸ்டன்), அகில இலங்கை சேக்கிழார் மன்றம் தயாரித்த சொக்கனின் தெய்வப்பாவை (நெடுமாறன்) போன்ற சமய நாடகங்களிலும் பங்கேற்றிருந்தார்.

இவர் நடிப்பதோடு மட்டும் நில்லாது பல நாடகங்களை இயக்கியும் உள்ளார். இவற்றில் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலாமன்றத்திற்காக குழந்தை சண்முகலிங்கத்தின் ‘புழுவாகி மரமாகி’, ‘தியாகத் திருமணம்’ மற்றும் சென்.பொஸ்கோ பாடசாலை மாணவர்களுக்காக ‘வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள் நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை.

நாடகமும் அரங்கியலும் பாடத்தை உள்ளடக்கிய கலைமாணிப் பட்டத்தை யாழ் பல்கலைக்கழகத்தில் பெற்ற இவர் அண்மைக் காலங்களில் நாடகங்கள் சம்பந்தப்பட்ட கருத்தமர்வுகளில் வள ஆளுநராக கலந்து கொண்டு வருகிறார்.

2008ம் ஆண்டு ச.உருத்திரேஸ்வரன் அவர்கள் யாழ் அரச அதிபரால் கலைப்பரிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



sriskanthan.p@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

இணையத்தளத்திலும்
‘தாய்வீடு’
www.thaiveedu.com